# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 12** **நாள்: 08.02.2017**

## சென்னை பள்ளிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்டு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.02.2017) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் சென்னை பள்ளிகளுக்கு இடையே நடைபெற்ற தடகள விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் 281 பள்ளிகள் சீரும் சிறப்புடனும் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 88,792 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். சென்னைப் பள்ளிகள் 2015–2016ம் கல்வியாண்டில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 95% மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 86% தேர்ச்சி பெற்றுள்ளன.

மாணவர்கள் அறிவு நலம்பெற கல்வியை மட்டும் கொடுப்பதுடன் நின்று விடாமல் மன உறுதியை பெற யோகா, உடல் உறுதியடைய பல்வேறு விளையாட்டுகளும் கற்பிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக, சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு 10 மையப் பள்ளிகளிலும், உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு கிழக்கு, மத்தியம், வடக்கு மற்றும் தெற்கு என 4 மாவட்ட அளவிலும் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் சுமார் 35,000 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு ரூ.9,00,000/– மதிப்புள்ள பரிசுகளை பெற்றனர்.

வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு இறுதிச்சுற்று போட்டிகள் இன்று காலை நேரு விளையாட்டரங்கில் கொடி ஏற்றப்பட்டு அணிவகுப்பு நடைபெற்றது. பின்னர் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு கலைநிகழ்ச்சிகளுடன் ஆரம்பிக்கப்பட்டு, தடகளப் போட்டிகள் நடைபெற்றது. இதில் சுமார் 1200 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு 10, 8 மற்றும் 7 கிராம்களில் வெள்ளி பதக்கங்கள் 312 எண்ணிக்கையில் வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் அதிக புள்ளிகள் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கும், பள்ளிகளுக்கும் மற்றும் சென்னைப் பள்ளிகளில் பயின்று தேசிய, மாநில அளவில் கலந்து கொண்டு பரிசுகளை பெற்று வந்துள்ள மாணவர்களுக்கு கோப்பைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர் (கல்வி) திரு.மா.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியின் நிறைவாக கல்வி அலுவலர் திருமதி.டி.ரஞ்சனி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**